**இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ-வீதி II) - 2023**

---

இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நவம்பர் 22 ஆம் திகதிய 3579 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க மற்றும் 3580 எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகள் மற்றும் 2019 நவம்பர் 13 ஆம் திகதிய 3851 எஸ்ஆர்ஐ மற்றும் 2021 மே 28 ஆம் திகதிய 4067 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2023 நவம்பர் 28 ஆம் திகதிய 4384 எஸ்ஆர்ஐ என்பவற்றின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டக் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பது நீண்டகால விளைவாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 165,185 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,084.60 மில்லியனானதுடன் அதில் ரூபா 137,070 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 900 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 28,115 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 யூலை 20 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2027 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயப்பிரிவல் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை<br>ரூபா<br>மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 8 இற்கு முரணாக மீளாய்வாண்டின் போது நிறுத்தப்பட்ட 07 ஒப்பந்ததாரர்களிடமிருந்து வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் மீதான அறவீடுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 1,453.96 | ஒப்பந்தங்களின் இடைநிறுத்தலைத் தொடர்ந்து ஒப்பந்த நிபந்தனையின் முற்பணக் கொடுப்பவின் அறவீட்டிற்கான வேலை வழங்குனர் நடவடிக்கை எடுத்திருந்தனர். ஆறு ஒப்பந்தக்காரர்களின் செல்லுபடியாகும் தன்மை நீடிக்கப்பட்டிருந்தது. ஆகையால் அறவீடானது ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் வேலை வழங்குனரின் பார்வையில் ஐயத்திகிடமாக இருந்திருக்கவில்லை. | ஆரம்ப முற்பண முறிகள் குறித்த திகதிக்கு முன்னர் காசாக்கலிற்கு சமர்பிக்கப்பட்ட வேண்டுமென்பதுடன் வருமதிகளாக பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பிணக்குகள் இணக்க சபைக்கான கோரிய ஏற்பாட்டுத் தொகையானது ரூபா 907 மில்லியன் தொகையானதுடன் ஆய்வுகூடம், தளபாடம் மற்றும் ஆய்வு உபகரணம் போன்றவற்றின் மற்றும் இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்களின் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளது கணக்காய்வில் உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. | 907 | கோரப்பட்ட தகவல்கள் வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இருந்தமையால் விபரங்களைச் சேர்ப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் உரிய நேரத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடிந்திருக்கவில்லை. | ஒவ்வொரு இணக்க விடயங்களுக்கும் தனிப்பட்ட கோவைகள் மற்றும் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டியதுடன் அனைத்து ஒப்பந்த நிர்வாக ஆவணங்களும் பிணக்குகள் முடியும்வரை பேணப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் 4.2 ஆம் உட்பிரிவு | செயலாற்றல் பிணைமுறிகள் ஒப்பந்ததாரர்களால் அவர்களது சொந்த கிரயத்தில் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்ததாரர்களிற்கான கோரக்கூடிய பூர்வாங்க மற்றும் பொது உருப்படிகளின் கீழ் பீஓகியூ இல் தனித்தனி கொடுப்பனவு உருப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றல் பிணைமுறிகளின் கிரயத்தை மீள்நிரப்புச் செய்வதற்காக ஊவா மாகாணத்தில் உள்ள ஒப்பந்ததாரர்களுக்கு ரூபா 85.64 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பீஓகியூ உருப்படி மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் இந்த உருப்படி செலுத்தப்பட்டது. இந்த உருப்படிகள் தொடர்சியான பொதிகளில் அகற்றப்பட்டது. | ஒப்பந்தத்தின் நிபந்தனை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 2.4 மற்றும் 2.6 ஆம் உட்பிரிவுகள். | பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பொறியியலாளர் மதிப்பீடுகள், கேள்வி ஆவணங்கள் மற்றும் அளவீட்டு விலைப்பட்டியல்கள் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பீஏ 4 மற்றும் பீஏ 5 ஒப்பந்தப் பொதிகள் தொடர்பாக பொறியியலாளர் மதிப்பீடுகள், கேள்வி ஆவணங்கள் மற்றும் அளவீட்டு விலைப்பட்டியல்கள் ஆகியவற்றில் உள்ள பொருட்களின் விலைவிகித முரண்பாடுகள் மற்றும் தவறான விளக்கம் காரணமாக ரூபா 48.2 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. ஊரிய தரப்பினர்கள் தொடர்பிலான எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் கணக்காய்வில் சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | போட்டி அடிப்படையில் பெறுகை மேற்கொள்ளப்பட்டது. ஓட்டு மொத்த விலை மனு நியாயமாகவுள்ளபோது உயர் விலைக்கதக சமரசஞ் செய்யப்படுவதற்கு ஏடீபி வழிகாட்டலில ஏற்பாடு இருக்கவில்லை. | நட்டத்தை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ஒப்பந்தங்களின் விசேட நிபந்தனைகளின் 108.4 மற்றும் 120.7 ஆம் உட்பிரிவுகள் | நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் அனைத்து ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்கள் ஒப்பந்ததாரருக்குத் திருப்பியளிக்கப்படும் என்ற போதிலும் 2022 வரையிலும் ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்களுக்காக ரூபா 518.99 மில்லியன் மற்றும் ரூபா 14.13 மில்லியன் மொத்த தொகையாக செலுத்தப்பட்டுள்ளுமையை சான்றுகள் இன்மையால் உறுதிப்படுத்த முடியாமலிருந்ததுடன் இதனால் சாதகமான ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நன்மைகளை ஏற்படுத்தலாம். | நிர்மான காலப்பகுதியின் போது உபகரணங்களை பயன்படுத்துவதற்காக இத்தகைய விகிதங்களை ஒப்பந்தக்காரர் கோரியிருந்தார். ஆகையால் இந்த நிபந்தனை எந்தவித தேவையற்ற நன்மைகளையும் உப்பந்தக்காரர்களுக்கு கெடுக்காது மேலும் ஆர்டியூ அதே உபகரணத்தில் போதியளவு இருப்பை வைத்திருப்பதால் பீஎம்யூ இந்த நிபந்தனைகளை வரைபு செய்திருந்தது. | ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனை ஒழுங்கான காசாக்கலை அமுல்படுத்த முன்னர் மீளாய்வு செய்யப்படவேண்டும். ஊழியர் உரிமைகள் பணத்திற்கான பெறுமதியினை பேணுதல் மற்றும் ஒப்பந்த தாமத நன்மைகளை பெறுவதை தடுப்பதற்கு விலை மனு ஆவணங்களை மீளாய்வு செய்யும் போது விசேட கவனம் ரீஈசி மற்றும் பீசி ஆல் செலுத்தப்படவேண்டும். |
| (ஈ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | செயற்திட்ட வழிநடாத்தல் குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும். எனினும்,மீளாய்வாண்டின் போது ஒரேயொரு கூட்டம் மாத்திரம் நடைபெற்றிருந்தது. | குறிப்பிட்ட காலப்பகுதியின் போது வேலைகள் நிறுத்தப்பட்டமையினால் ஒழுங்கு அடிப்படையில் கூட்டங்கள் கூட்டப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணக்கப்படவேண்டும். |

### 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

கிழக்கு, வடக்கு, ஊவா மற்றும் மேல்மாகாணங்களிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட வீதிகள் தொடர்பாக போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பதற்கு கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் அணுகுமுறையை முன்னேற்றுவற்கு கிராமிய மற்றும் தேசிய வீதிகளை முன்னேற்றுவது நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

(அ)

| **கூறு** | **செயற்பாடு** | **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்** | | |
| | | **கிமீ** | **கிமீ** | | |
| தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் | கிராமிய வீதிகள் | 3,654.95கிமீ | 2,115 கிமீ | நாளதுவரையாக்கப்பட்டவசதி நிர்வாகக் கையேடு- நவம்பர் 2023 இன் | அரச கடன்களின் வரையறை மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல். | | | | பிரகாரம், கிராமிய வீதிகளின் 3,654.95 கிலோமீற்றர்களை முன்னேற்றுவதற்கு 04 மாகாணங்களின் கீழ் 53 பொதிகள் திட்டமிடப்பட்டது. எனினும், 2,115 கி.மீ (57.87%) மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்களை பூர்த்திசெய்வதிலுள்ள காலதாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்** அரச கடன்களின் வரையறை முழு நோக்கெல்லையினை பூர்த்தியாக்கல் சாத்தியமற்றதாகின்றது. கிளை 04 கடனின செயற்பாட்டுடன் சிரம வேலைகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** குறித்த கால எல்லைக்குள் நிகழ்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)

| **கூறு** | **செயற்பாடு** | **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்**<br>**கிமீ** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்**<br>**கிமீ** | | |
| தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல். | தேசிய வீதிகள் | 54.45 கிமீ நீளத்துடனான 06 வீதிகள் | 05 வீதிகளின் செயன் முன்னேற்றம் 01 சதவீதத்தை விட குறைவாக இருப்பதுடன் 01 வீதியானது 38 சதவீத முன்னேற்றத்தை அடைகின்றது. | 06 தேசிய வீதிகளின் 54.45 கிலோமீற்றர் உண்மையான நீளம் மேல் மாகாணத்தின் கீழ் புனரமைப்பதற்கு திட்டமிட்ட போதும் 05 தேசிய வீதிகளின் பௌதீக செயன்முன்னேறம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் 01 சதவீதம் தொடக்கம் 80 சதவீதத்துடன் ஒப்பிடும போது 01 சதவிதர்ா விட குறைவாகவிருந்ததுடன் மீளாய்வாண்டின் பின் இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட 100 சதவீத இலக்கத்தில் 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒரேயொரு பொதி மாத்திரம் (என் ஆர் 07) 38 சதவீத பௌதீக செயன்முன்னேற்றத்தை அடையமுடிந்திருந்தது. | அரச கடன்களின் வரையறை மற்றும் ஒப்பந்தங்களை பூர்த்திசெய்வதிலுள்ள காலதாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்** நிதியிடல் பிரச்சினையால் மேல் மாகாணத்திலுள்ள தேசிய வீதிகளின் 05 ஒப்பந்தங்கள் ஊழியர் வசதிக்காக இடைநிறுத்தப்பட்டது. எனினும், ஒரேயொரு ஒப்பந்தம் (என்ஆர்/07) செயன்முறையிலுள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** குறித்த கால எல்லைக்குள் நிகழ்ச்சி திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அதிகபடச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

(இ)

| **கூறு** | **செயற்பாடு** | **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**<br>**எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்**<br>**நிலத்துண்டு (பரப்பு)** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்**<br>**நிலத்துண்டு (பரப்பு)** | **கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல். | நன்கொடை செய்யப்பட்ட காணிகளை சுவீகரித்தல். | 4,075 | 2,752 | வீதி புனரமைப்பு வேலைகளின் போது உரிய காணி உரிமையாளர்களால் செயற்திட்டத்திற்கு 4,075 காணி நிலங்கள் கையளிக்கப்பட்ட போதும், உரிய அனுமதி கடிதங்கள் மற்றும் 1,323 காணி நிலங்களின் ஏனைய ஆவணங்களின் உரிய உள்ளூர் அதிகார சபைக்கு மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கையளிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | உரிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கலிலுள்ள காலதாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்** 1323 நிலத்துண்டுகள் வீதிகளின் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னர் உரிய அதிகார சபைக்கு கையளிக்கப்படும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** உரிய அதிகாரிகளுக்கு ஆவணங்களை கையளிப்பதற்கு நிபந்தனை அறிமுகப்படுத்த வேண்டும்.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் 14.7 ஆம் உபபிரிவின் பிரகாரம் 56 நாட்களுக்குள் ஒவ்வொரு ஐபிசி இல் சான்றுப்படுத்தப்பட்ட தொகையை ஊழியர் செலுத்தப்பட முடிந்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் வேலைகளுக்காக செலுத்தப்பட வேண்டியவை ருபா 5,558.94 மில்லியனாகவிருந்தது. அதில், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறும் செலுத்தப்பட்டிருக்காத 2022 ஆம் ஆண்டின் ஐபிசி பெறுமதிகளாக ரூபா.1,188.03 மில்லியன் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்த நிபந்தனையின் 14.8 ஆம் உபபிரிவின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலதாமத வட்டியாக ருபா 2,074.11 மில்லியன் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஒப்பந்தகாரர்களுக்குரிய கொடுப்பனவு காலதாமதம் அரசாங்கத்திற்கு மேலதிக கிரயத்தையும் சுமையும் ஏற்படுத்தும். ஸ | வேலைகள் 2023 ஆரம்பத்தில் நிறுத்தப்பட்டதுடன் பல ஐபீசீ கொடுப்பனவுகள் போதிய பணமின்மையால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எனினும், நிகழ்ச்சித்திட்டத்தின் கிளை 4 கடனினைப்பெற்ற பின்னர் அனைத்து ஐபீசீக்களின் குறிப்பிடத்தக்க பகுதி தீர்ப்பனவு செய்யப்படும். ஆனால், காலதாமதக் கட்டணத்திற்கான வட்டிக் கொடுப்பனவுகள் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் அரசாங்க நிதிகளிடமிருந்து செலுத்தவேண்டியுள்ளது. | காலதாமத வட்டியினைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கோரிக்கைகளின் சரித்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ருபா 8,197.88 மில்லியன் ஆரம்ப முற்பணங்கள் ஒப்பந்தகாரரகளுக்குரிய கொடுப்பனவில் தாமதம் ஏற்பட்டமை கடினமான வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பின் மீதி வேலைகள் நோக்கெல்லை இன்மையால் நிச்சயமற்றதாகவிருந்தது. | தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒப்பந்தகள் நிதி வரையறையால் விட்டுச்சென்றது. ஆகையால் முற்பணங்கள் திட்டமிடப்பட்டவாறு அறவிடப்பட முடிந்திருக்கவில்லை. எனினும் ஆரம்ப முற்பணங்களிலிருந்து மிகுதி தொகைணை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கொள்கை தயாரிப்பாளர்கள புனரமைப்பு மிகுதி வேலைகளின் போது முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை அறிமுகப்படுத்த வேண்டும. |
| (இ) | ஊவா, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள 10 ஒப்பந்த பொதிகள் உத்தியோகத்தர்களால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடைநிறுத்தப்படுவதுடன் அதற்காக மேற்கொண்ட ருபா 2,014.10 மில்லியன் தொகையான ஆரம்ப முற்பணங்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவிடமுடியாதுள்ளது. | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் இளவீட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்நது. | பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து முற்பண முறிகளை காசாக்கல் மூலம் அறவிடுவதற்கோ நட்டங்களை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன் ஒழுங்காற்று நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 03 இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களிலிருந்து அறவிடவேண்டிய ருபா 690.74 மில்லியன் தொகை நிகழ்சி திட்டதால் செயலாற்றல் முறிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காலதாமதங்களினால் 02 வருடத்திற்கு மேலாக அறவிடமுடியாதிருந்தது. அதன் விளைவால் செயலாற்றல் உத்தரவாதங்களை காசாக்கலிற்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கு சந்தர்ப்பமாக ஒப்பந்தகாரரால் அத்தகைய காலதாமதம் எடுக்கப்பட்டது. | ஒப்பந்தங்களிலிருந்து உத்தரவுகளால் செயலாற்றல் உத்தரவாதங்கள் காசாக்க முடிந்திருக்கவில்லை. | பொறுப்பான உத்தியோகத்தைர இனங்காண்பதற்கும் விசாரணை நடாத்தப்பட வேண்டியதுடன் நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 3.3 ஆலோசனை சேவைகள்

நிகழ்ச்சித்திட்டம் 2022 சனவரி 03 இல் பிரதானமாக வீதி பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை (RMTF) விரிவுபடுத்துதல், உள்ளுர் வீதி பராமரிப்புக்கான RDA இன் பொறுப்பை விரிவுபடுத்துதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்கான விரிவான கணக்கீட்டு மற்றும் நிதிக் கையேட்டை உருவாக்குதல் தொடர்பான ஆலோசனைகளைப் இது தொடர்பில் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 8.2 மில்லியன் பெறுமதியில் பொது நிர்வாக நிபுணருடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் இது தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது நிர்வாக நிபுணர் வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினை மீள் ஒழுங்குமைக்க மற்றும் விரிவாக்கலிற்காக நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 இல் பாதீட்டுப் பிரேரணை இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஆர்எம்ரீவ் அமுல்படுத்தியிருக்கவில்லை. | நோக்கெல்லையில் இடம்பெறாத வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவிற்குரிய வருமபனத்தை உறுதி செய்தல். |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கீட்டு நடைமுறைகளிற்கான கையேட்டின் உள்ளடக்கத்தினை பயன்படுத்துவது தெடர்பில் சான்றுகள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | போக்குவரத்து மற்றும் நெடுஞ்நாலைகள் அமைச்சின் செயலாளர் ஆலோசனையாளரால் சமர்பிக்கப்பட்ட கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவ கையேட்டினை மதிப்பிடுவதற்கு குழுவென்றை நியமித்திருந்தனர். தொடர்ந்து குழு அறிக்கை அதன் பிரேரணைகளை அமுல்படுத்துவதற்கு பீஎம்யூக்கு குழு அறிக்கை பெறப்பட்டிடிருந்தது. மேற்கூறப்பட்ட பிரேரணைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஏற்பட்ட கிரயத்திற்கு வருமானத்தை உறுதி செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொது நிர்வாக நிபுணருக்கு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5.17 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இது ஒப்பந்த பெறுமதியின் 63 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்ர்கின்றது. இந்த ஒப்பந்தத்தின் பூர்த்தியாக்கல் இலக்குகளின் பூர்த்தியாக்கலிலுள்ள காலதாமதத்தால் பூர்த்தியாக்கல் மற்றும் இந்த ஒப்பந்ததின் வினைத்திறன்களானது கணக்காய்வில் சந்தேகத்திற்கிடமாகவுள்ளது. | பொது நிர்வாக நிபுணரின் குறிப்புரைகளின் (ரீஓஆர்) பிரகாரம் பின்வரும் அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டிருந்தது.<br>• பரீட்சிப்பு அறிக்கை 2802.2022<br>• கிராமிய வீதி பராமரிப்பு மதிப்பீடு 30.05.2022<br>• கணக்கு மற்றும் நிதி முகாமைத்துவ கையேடு 30.07.2022<br>• கிராமிய வீதிக்கான நிதி திட்மிடல் 02.12.2022 | ஏற்பட்ட கிரயத்திற்கு வருமானத்தை உறுதி செய்தல். |

## 3.4 குறைவாகப்பயன்படுத்திய வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுவாக பல் நிதி வசதியின் கீழ் நேரத்திற்கு நேரம் பல கிளைகளிடமிருந்து ஐ.அ.டொலர் 900 மில்லியன் நன்கொடையாளரிடமிருந்து பொதுவாக விடுவிக்கப்பட்டிருந்தது. நன்கொடையாளர் அவர்களுடைய முறையான வழங்கல் முறைமையின் பிரகாரம் மூன்று கிளைகளின் கீழ் ஐ.அ.டொலர் 500 மில்லியனை 2023 திசெம்பர் 31 இற்கு முன்னர் விடுவித்தது. எவ்வாறெயினும், பேரினப்பொருளியல் நெருக்கடியினால் செய்முறை இடைநிறுத்தப்பட்டிருந்தது. பின்னர், ஏற்கனவே தொடங்கப்பட்ட கடினமான வேலைகளையும் முடிவடையாதுள்ள வீதி பிரிவுகளையும் ஆரம்பிக்கப்படாத விதிகளின் பராமரிப்பினையும் ஐவீதி மற்றும் இரண்டாந்தர ஐவீதி நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு தொடர்பிலான கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் இரண்டாந்தர வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கிளை 4 இன் கீழ் ஐ.அ.டொலர் 60 மில்லியனை மேலும் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. ஏற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகையான ரூபா.137,070 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 900 மில்லியன் கடன் தொகையில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 109,316 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 508.52 மில்லியன் தொகை | 10 வருட அமுலாக்க காலப்பகுதியினுள் பல் பகுதி நிதி வசதியின்(எம்எவ்எவ்) மூலம் நிகழ்ச்சித்திட்டம் நிதியிடப்படுகின்றது. ஐ.அ.டொலர் 560 மில்லியனிற்காக 04 பகுதியில் பெறப்பட்டதுடன் மிகுதித்தொகை ஐ.அ.டொலர் 340 மில்லியன் பொருளாதாரச் சிக்கலால் அரச கடனில் வரையறையை விளைவித்திருந்தது. அண்மையில் ஐவீதி 1 இன் செலவீனத்திற்கான ஏற்பாட்டை ஐவீதி 2 கிளை 4 அண்மையில் அனுமதித்ததுடன் அதற்கிணங்க ஐவீதி1 இற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நோக்கெல்லையில்லாத ஒதுக்கீட்டை இனங்காண்பதற்கான நடவடிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு முறையான செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்தது. இது கடன் உடன்படிக்கையின் மொத்த ஒதுக்கீட்டின 56.50 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும், ரூபா 1,376.64 மில்லியன் தொகை சிவில் வேலைகளுக்காக ஐவீதி நிகழ்ச்சித்திட்டத்தின சிவில் வேலைகளுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இரண்டாம் வீதி முதலீட்டு நிகழ்ச்சி திட்டத்தின் பகுதி 4 இற்காக 2023 நவம்பர் 28 இல் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ஏற்கனவே தொடங்கப்பட்ட சிரமமான வேலைகளிற்கும் சமூகமளிப்பதற்கும் முடிவடையாத வீதி பிரிவு, மற்றும் முன் மேற்கொள்ளப்பட்ட வேலைக் கொடுப்பனவு போன்றவற்றிற்கும் ஐ வீதி மற்றும் ஐவீதி ஐஐ நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஐ.அ.டொலர் 60 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 2,953.33 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர 8.98 மில்லியன் மாத்திரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் வழங்கப்பட்டிருந்தது. | பகுதி 4 கடன் 2023 திசெம்பர் 3 இலிருந்து வினைத்திறனாகவிருந்ததுடன் 2027 மார்ச் 31 இல் கடனை முடிவுறுத்தும் காலப் பகுதியில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திட்டமிடப்பட்ட க'டமான வேலைகள் முடிவடைந்தவுடன் கிளை 4 இன் பெரும் பகுதி 2024 இல் மற்றும் 2025 இல் பயன்படுத்தப்படுத்தப்படும். | செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதும் திருத்தியமைக்கப்பட்ட எவ்ஏம் ஐ அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 23,699.50 மில்லியன் தொகையை ஒதுக்கீடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் பிற்போடப்பட்ட நிதியாக உள்நாட்டு நிதியங்கள் ஊடாக மிகைநிரப்பு ஒதுக்கிட்டின் மூலம் ரூபா 3,600 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வின் போது மொத்த ஒதுகிகீட்டில் 14.63 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,992.85 மில்லியன் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்க்கான பாதீட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அடுத்த கடன் பகுதி பெறப்படும் வரையிலாலும் வேலைகள் தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஒப்பந்தக்காரர் அறிவுறுத்தப்பட்டிருந்தார். ஐவீதி ஐ கிளை 4 கடன் 2023 திசெம்பர் 03 இலிருந்து செயற்பாட்டிலிருந்தது. ஆகையால் எதிர்பார்க்கப்பட்டதை விட உண்மையான செலவீனம் குறைவாகவிருந்தது. | ஒதுக்கீடுகளை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்ககபட வேண்டியதுடன் வினைத்திறனதன நடவடிக்கைகள் காலதாமதமில்லாமல் வெளியீட்டை அடைவதற்கு எடுக்கப்பட வேண்டும். |

**3.5 சர்க்கைக்குரிய தன்மையிலான விடயங்கள்.**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வு பரிந்துரை |
|---|---|---|
| 2023 யூலை 13 இல் பிரசுரிக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை பொது செலவீன மீளாய்வு குழுவின் (பீர்ஆர்சீ) அறிக்கையின் பிரகாரம் முன்வரும் இடைக்கால காலப்பகுதியின் போது இடைநிலை வரையிலும் நிகழ்சித்திட்டத்தால் ஏற்கனவே தொடங்கப்பட்ட புனரமைப்பு வேலையை பூர்த்தி செய்வதற்கு குழுவிற்கு சிபாரிசு செய்யப்பட்ட போதும் மேற்கூறப்பட்ட குழு தீர்மானத்திற்கு முரணாக 9.02 கிமீ நீளத்துடன் கம்பஹா மாவட்டத்தில் இன்னும் தொடங்கப்படாத வேலைகளையும் உள்ளடக்கி ரூபா 321.71 மில்லியன் மதிப்பிடப்பட கிரயத்தில் 04 புதிய வீதிகளை புனரமைப்பதற்கு நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | இந்த நிகழ்ச்சி திட்டத்தின் மூல எல்லையில் ஏற்கனவே இந்த வீதிகள் உள்ளடக்கப்பட்டதுடன் ஏபீயானது இந்த வீதியில் சிரம வேலைகள் மாத்திரம் மேற்கொள்வதற்கு பகுதி 4 கடனினை வழங்கியிருந்தது ஏடீபீ வழகாட்டலின் பிரகாரம் ஏற்கனவே புனரமைக்கப்பட்டு வருகின்ற வேலைகள் (பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டவை) இன்னும் தொடங்காத வேலைகள் வீதிகளில் இந்தச் சிரமமான வேலைகள் இனங்காணப்பட்டது. ஆகையால் நிகழ்சித் திட்டமானது இந்த 4 வீதிகளின் சிரமங்களை இனங்கண்டமையினால் இந்த வீதிகள் மிகஅளவழல் பழுதடைந்திருந்தமையுடன் இந்த நேரத்தில் பயன்படுத்த கூடிய நிலையில் இல்லை. | குழு சிபாரிசுகளுடன் இணங்குவதுடன் குழு சிபாரிசுகளுடன் இணங்காமை தொடர்பாக விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்பதுடன் புதிய அனுமதி பெறப்பட் வேண்டும். |